மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா.

திருமதி மு. சந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

(மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் இருக்கையைவிட்டு எழுந்து முன் இருக்கைக்கு வந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா-விடை நேரம் நடந்துகொண்டிருக்கிறது. முன்வரிசை இருக்கைக்கு அருகில் வந்து நிற்காதீர்கள். உங்கள் இருக்கைக்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்தான் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் கோஷமிட்டுக்கொண்டே அவையை விட்டு வெளியேறினர்.)

முற்பகல் 9-35

இந்தக் கேள்வியைக் கேட்ட மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

அடுத்து, வினா எண் 22, திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

22—

கூட்டுறவு வங்கி

***17885—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தொகுதி, மெதுகும்மல் கூட்டுறவு வங்கியை மீண்டும் செயல்பட வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விளவங்கோடு தொகுதி, மெதுகும்மல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மீண்டும் செயல்பட, கடந்த 3-10-2008 அன்று

2008 நவம்பர் 13]

கன்னியாகுமரி மாவட்ட இணைப் பதிவாளரால் ஆணைகள் வழங்கப்பட்டு, மேல்புறம் கூட்டுறவு சார்-பதிவாளர் (சி.எஸ்.ஆர்.) அந்த வங்கியின் தனி அலுவலராகப் பொறுப்பேற்றுள்ளார். அந்த வங்கியின்மூலம் நகைக் கடன், பயிர்க் கடன் ஆகியவற்றை விரைவில் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் பத்தாண்டுக் காலமாக அந்த வங்கியை மீண்டும் செயல்பட வைப்பதற்காக அப்பகுதி மக்களும், நானும் கடுமையானதொரு முயற்சியினை எடுத்து வந்தோம். தட்டிய கதவுகள் எல்லாம் மூடப்பட்டன. கடைசியாக நான் நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து முறையிட்டேன். அவருடைய உறுதியான நடவடிக்கைதான் அந்த வங்கி மீண்டும் செயல்படுவதற்குக் காரணம். அதற்காக நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல, அந்த வங்கியைச் செயல்பட வைப்பதற்காக நமது மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களும் பல்வேறு உதவிகளைச் செய்தார்கள். அவருக்கும் இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வங்கி கலைக்கப்பட்ட நேரத்தில் அந்த வங்கியின் கட்டுப்பாட்டில் 6 பொது விநியோகக் கடைகள் இருந்தன. அந்தப் பொது விநியோகக் கடைகளும் மீண்டும் அந்த வங்கிக்கு வழங்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். மேலும், அந்த வங்கியில் கையாடல் நடந்த நேரத்தில், கையாடலில் ஈடுபட்ட ஊழியர்களின் சொத்துக்கள் Conditional Attachment-க்கு உட்படுத்தப்பட்டன. சுமார் 30 இலட்சம் ரூபாய்க்கான சொத்துக்கள் Conditional Attachment-க்கு உட்படுத்தப்பட்டாலும், இதுவரையிலும் அந்தச் சொத்துக்கள் ஏலம் விடப்படவில்லை. அந்தச் சொத்துக்களை எல்லாம் ஏலத்திற்குவிட்டு கூட்டுறவுத் துறையினுடைய நிதியில் அதைச் சேர்த்திட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வங்கியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே 1999 ஆம் ஆண்டில் அது கலைக்கப்பட்டது. கலைப்பதற்கான நோக்கம்

ஏராளமான தவறான நடவடிக்கைகள் அங்கு நடந்ததால்தான் அது கலைக்கப்பட்டது. அவற்றையெல்லாம் விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுத்து இன்றைக்கு அந்த வங்கியைத் தொடங்கச் செய்திருக்கிறோம். இதுகுறித்து வேறு ஏதாவது அறிய விரும்பினால், தனியாக என்னிடத்தில் எழுதிக் கொடுத்தால் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல என்னுடைய தொகுதிக்குட்பட்ட எண் 926-விளவங்கோடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் தேதி 13 நபர்களிடத்தில் விவசாயக் கடனுக்கான மனுக்கள் பெறப்பட்டு சுமார் 8 மாத காலமாகியும், இதுவரையில் அந்தக் கடன்கள் வழங்கப்படாத நிலை உள்ளது. அவர்களுக்குக் கடன் வழங்கிட இந்தத் துறை நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கையினை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதை ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறேன். இப்போதும் சொல்கிறேன். அதற்கான துரிதமான நடவடிக்கையினை எடுத்திட நாங்கள் தயாராக இருக்கிறோம். இதிலே வேறு ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் அதுகுறித்து என்னிடத்தில் தனியாக எழுதிக் கொடுத்தால் அதனையும் சேர்த்து நடவடிக்கையினை விரைவுபடுத்துகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

23—

வேளாண்மை

***43411—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—